**தலைப்பு 304 - வளிமண்டலவியல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) இந்த அறிக்கையின் 1.6.1(ஆ) பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

---

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி திறைசேரியின் இறுதி கணக்கு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 3,854,080,777 ஆக இருந்த போதிலும், நிதி நிலமை தொடர்பான கூற்றில் அது ரூபா 138,334 இனால் குறைத்து ரூபா 3,854,219,111 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரியின் இறுதி கணக்கு அறிக்கையுடன் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | திறைசேரியினால் மற்றுமொரு தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 138,334 தொகை நீக்கப்பட்டு பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து வகைகள் 08 இன் 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக முன்கொண்டுவரப்பட்ட மீதியானது ரூபா 252,557,831 ஆன போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த மீதி ரூபா 62,983,121 ஆனமையால் மீதிகளுக்கிடையே ரூபா 189,574,710 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | இந்த வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்த கணக்குகள் கணக்குகளினூடாக வெளிப்படுத்தப்பட வேண்டும். | இறுதிக் கணக்குகள் பொது நிர்வாக சுற்றறிக்கையின் 271/2019 இன் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகளில் உள்ளமையால் அந்த மாதிரிகளை மாற்றியமைத்து தரவுகளை முன்வைத்தல் கடினமானதென குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்களத்தினால் டொப்லர் ரேடார் கட்டமைப்பினை கொள்வனவு செய்வதற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 408,825,422 தொகையான கிரயமானது கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிராததுடன், உலக காலநிலை விஞ்ஞான சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையில் காணப்பட்ட ரூபா 322,926,702 ஆன தொகை 2019 திசெம்பர் மாதம் மீண்டும் வளிமண்டளவியல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 24 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற அந்த தொகையில் திணைக்களத்திற்கு ரூபா 1,000,000 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு, எஞ்சிய தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது. அவ்வாறே 2016 சனவரி மாதத்தினுள் கோபுரத்திலிருந்த ரூபா 9,146,765 பெறுமதியான உபகரணங்களும் தொலைந்து போயிருந்தது. இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் எந்தவிதமான பதிவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொது திறைசேரியின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த சொத்துக்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏ தரத்திலான திணைக்களமொன்று என்பதால் ரூபா 1 மில்லியன் தொகையானது நிறுத்தி வைக்கப்பட்டு, எஞ்சிய தொகை திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதாக மற்றும் முன்னர் டொலரின் பெறுமதியானது ரூபா 110 ஆக் காணப்பட்டதுடன், தற்போதைய பெறுமதி ரூபா 179 ஆனமையின் அடிப்படையில் எஞ்சியதாக காணப்பட்ட தொகை ரூபா 322 மில்லியனானதாக. |

## 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 05 வருடங்களுக்கு முன்னர் சேவையை விட்டுச்சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 138,922 தொகையான கடன் மீதி மற்றும் ஒரு வருடத்திற்கு முன்னரி மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 97,166 தொகையான கடன் மீதியையும் அறவிடுவதற்கு அல்லது வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணையாளர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு அல்லது பொது திறைசேரியின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடனை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன், மரணமடைந்த உத்தியோகத்தர்களின் மரண பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டுள்ளதாக ஓய்வூதிய திணைக்களத்திடமிருந்து 2020 மார்ச் 12 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| அவதானிப்புகள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | | |
| | ரூபா | | | |
| நிதிப்பிரமாணம் 571 | 179,935 | 02 வருடங்களை கடந்த வைப்புகளை கால ரீதியில் உரிய கணக்குகளுக்கு அல்லது அரச வுரமானத்திற்கு எடுப்பதற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத்திற்காக மொத்த செலவினத்தின் ஒதுக்கம் ரூபா 522,320,000 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 331,770,294 அல்லது 64 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. சிறந்த கற்கையொன்றினை மேற்கொள்ளாது நிதியேற்பாடுகளை மேற்கொண்டமையால்ட 06 மூலதன செலவின விடயங்களின் ரூபா 155,280,000 ஆன நிதியேற்பாடு 40 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்பொன்று காணப்பட்டது. | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது சரியான நிதி இலக்குகளை கண்டறிவதற்கும், கிடைத்த நிதியினை சிக்கனமாக பயன்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு, உரிய பற்றுச்சீட்டுகள் தீர்க்கப்பட்டு முடிவுறுத்துவதற்கு தவறியமையால் நிதி எஞ்சியுள்ளது. |
| (ஆ) | செலவின விடயமொன்றிற்கு ஒதுக்கப்பட்ட செலவினத்தில் ரூபா 12,930,383 தொகை எஞ்சியிருக்கும் போது குறைநிரப்பின் ஊடாக ரூபா 28,250,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த செலவின விடயத்தின் கீழ் ரூபா 41,180,383 அல்லது 81 சதவீதம் எஞ்சியிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேறும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 549,071 தொகையான 07 பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புகள் சரியாக கணிப்பிடப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கொடுப்பனவுகளுக்காக முன்வைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் மாத்திரம் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உலக காலநிலை விஞ்ஞான சங்கத்தின் அளவீடுகளின் பிரகாரம், காலநிலை தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டளவில் திரவ உபகரணங்களுக்கு பதிலாக தன்னியக்க வளிமண்டளவியல் உபகரணங்கள் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அது தொடர்பிலான பங்களிப்பு கருத்திற்கொள்ளும் அளவில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தன்னியக்க வளிமண்டளவியல் கட்டமைப்பில் | தன்னியக்க வளிமண்டளவியல் நிலையத்தினை உரிய முறையில் பராமரித்து செயற்படுநிலையில் பேண வேண்டியதுடன், தொடர்பாடல் இணைப்புகளை உரிய தினத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒப்பந்தங்களை கைச்சாத்திடும் போது முறையான ஒப்பந்தத்தின் அடிப்படையில் உரிய கேள்வி முறியொன்றினை பெற்று பெறுகைகள் | திரவ அடிப்படை உபகரணங்களுக்கு பதிலாக இலத்திரனியல் தொழில்நுட்ப உபகரணங்களை பயன்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், தொடர்பாடல் இணைப்புகள் முறைமைப்படுத்தப்படாமையால் பின்னடைவொன்று ஏற்பட்டுள்ளது. உரிய பெறுகை நடவடிக்கைகளின் போது உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும், அது முறையான ஒப்பதந்தம் ஒன்றான குறிப்பிட முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தப்பட்டிருந்த செய்மதி புவியின் தொழில்நுட்பத்திலிருந்து புறம்பாக இருந்தமையால், IP/VPN தொழில்நுட்பத்தினை பெற்றுக்கொள்வதற்கு பெறுகை பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்த Dialog Axita நிறுவனத்தினால் 2 ½ வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த பெறுகை பணி நிறைவு செய்யப்பபட்டிருக்கவில்லை. அந்த பெறுகை பணிக்காக அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கைகச்சாத்திடப்பட்ட முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்றும் காணப்படவில்லை. | நிர்வாகம் தொடர்பான பணிகள் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | |
| (ஆ) | வளிமண்டளவியல் திணைக்களத்தினால் ஹைட்ரஜன் மின் பிறப்பாக்கியொன்றினை கொள்வனவு செய்வதற்கு 2018 ஆம் ஆண்டின் போது கூறுவிலைகள் கோரப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாமை மற்றும் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்காமை ஆகிய காரணங்களால் 2019 ஆம் ஆண்டின் போது நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 22.75 மில்லியனும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாக காணப்பட்டது. குறைநிரப்பு | பெறுகை நடவடிக்கைகளுக்கு நிதியேற்பாடுகள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது ஹைட்ரஜன் மின் பிறப்பாக்கியை கொள்வனவு செய்ய இயலாமையால் 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு நிதியேற்பாடுகள் கிடைத்த பின்னர் அதன் விலை அதிகரித்தமையால் கொள்வனவு செய்ய முடியாதிருந்தது. |

மதிப்பீடுகளின் மூலம் இந்த பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பெறுகையிலான நலிவுகள் காரணமாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. அதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 100 மில்லியன் மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 45 மில்லியன் எனுமாறு நிதியேற்பாடு பயன்படுத்த முடியாதிருந்தது.

## 3.2 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாட்டில் ஏற்படும் மழையுடனான காலநிலை மற்றும் அதனுடன் இணைந்த காலநிலை மாற்றங்களை மிகவும் துல்லியமாக அவதானிப்பதற்கு மற்றும் சீரற்ற காலநிலை தொடர்பில் முன் அபாய எச்சரிக்கை வழங்கும் நடைமுறைக்கு ஒத்துழைப்பனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் டொப்லர் ரேடார் கட்டமைப்பொன்று புத்தளம் மற்றும் பொத்துவில் வானிலை அவதானிப்பு நிலையங்களில் தாபிப்பதற்காக சர்வதேச ஒத்துழைப்பிற்கான யப்பான் நிறுவனத்தினால் 2,503,000,000 யப்பான் யென் நன்கொடையொன்றினை வழங்குவதற்காக 2017 யூன் 30 ஆந் திகதி இலங்கை அரசுடன் | ரேடார் கோபுரங்கள் நிர்மாணிக்கும் பணிகளின் போது, உடன்படிக்கையொன்றின் பிரகாரம் தாமதமின்றி மேற்கொள்வதற்கும், கோபுரம் தாபிக்கப்பட்டுள்ள காலநிலை அவதானிப்பு நிலையம் அமைந்துள்ள காணியை வளிமண்டளவியல் திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரேடார் கோபுரங்களுக்காக மின்சார இணைப்பினை பெற்றுக்கொள்ளும் பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளதுடன், பொத்துவில் ரேடார் கோபுரத்தின் நிர்மாண பணிகள் மேற்கொள்ளப்படும் காணியை சுவீகரிப்பதற்கும் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், இது வரையிலும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக இலங்கை அரசினால் ரூபா 486,650,000 தொகையும் செலவிட நேர்கின்றமையால், செயற்திட்டத்தினை மேம்படுத்தும் காலமானது 2017 – 2021 வரையானது என உடன்படிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது ரேடார் கோபுரங்களை நிர்மாணிக்கும் பணிகள் அதன் இறுதி கட்டத்தில் காணப்பட வேண்டிய போதிலும், இது வரையிலும் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்திருக்கவில்லை. அதன் பிரகாரம், எஞ்சிய அனைத்து பணிகளிலும் தாமதமொன்று ஏற்பட்டுள்ளதாக தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, பொத்துவில் ரேடார் கோபுரத்தின் நிர்மாண பணிகள் இடம்பெறும் வானிலை அவானிப்பு நிலையம் அமைந்துள்ள காணியையும் வளிமண்டளவியல் திணைக்களம் சுவீகரித்திருக்கவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம், ஒவ்வொரு அரச | நிலைபோறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண மற்றும் இலக்குகளை | நிலைபேறான அபிவிருத்தி உபாயமார்க்க திட்டம் தயாரித்தல் தொடர்பில் அறிவூட்டும் கூட்டமொன்று நடாத்துவதற்கு திட்டமிட்ட |

| | | |
|---|---|---|
| நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டிய போதிலும், நிலைபேறான அபிவிருத்தி உபாயமார்க்க செயல்பாட்டு திட்டம் வளிமண்டளவியல் திணைக்களத்தால் தயாரித்து நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. தரவுகளை களஞ்சியப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அண்மிக்கும் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | போதிலும், அதனை நடாத்த முடியாமையததுடன், அறிவுறுத்தியதன் பின்னர் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தரவுகளை சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளக கணக்காய்வாளர் பதவியும் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் 2019 யூலை 01 ஆந் திகதி வரையிலும் அந்த பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர் 2020 ஏப்ரல் 17 ஆந் திகதி இடமாற்றம் பெற்று சென்றுள்ளமையால் அந்த திகதி முதல் அந்த பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | உள்ளக கணக்காய்வாளராக பணியாற்றிய பெண் உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளமையால் 2020 ஏப்ரல் 17 ஆந் திகதி முதல் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. |